30th September 1958]

MR. SPEAKER : ஆஸ்பத்திரிகள் எங்கு இருக்கின்றன, செலவு எவ்வளவு என்பது கேள்வி. அதை விட்டு வேறு ஏதோ கேட்கிறீர்களே ?...... அடுத்த கேள்வி, 665.

Cement Distribution

* 665 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Union Government have given any suggestion that the control on the supply of cement to the Public should be relaxed; and

(*b*) whether it has been given effect to?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The Government of India proposed the complete abolition immediately of the permit systems for cement distribution to the consumers in this State. The question was examined by Government and it was decided that the cement stockists be permitted to sell 85 per cent of the stocks received by them without Government permits and that the remaining 15 per cent be sold on permits issued by competent authorities.

Sri Thiagarajaswami Devasthanam Lands, Tiruvarur

*** 666 *Q.*—SRI M. C. MUTHUKUMARASWAMY :** கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா, நாகை தாலூகா, திருவாரூர் ஸ்ரீ தியாக ராஜஸ்வாமி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான

(1) கட்டளை அன்னவாசல்,

(2) மொசகுளம்,

(3) கிடாரங்கொண்டான்,

(4) பள்ளிவாசமங்கலம் அல்லது கேக்கரை,

(5) காட்டூர்,

(6) திருக்கண்ணமங்கை, ஆகிய ஆறு கிராமங்களிலுள்ள ஒவ்வொரு தேவஸ்தானத்திற்கும் நன்செய், புன்செய் எவ்வளவு ?

(ஆ) ஒவ்வொரு தேவஸ்தானங்களின் மேற்பார்வையிலும் சாகுபடி செய்து வரும் மொத்த ஏக்கர் எத்தனை ?

(இ) மேற்படி பண்ணை சாகுபடி ஆரம்பிப்பதற்கு முன்னால், தொடர்ந்த 5 பசலிகளில் ஒவ்வொரு தேவஸ்தானத்திலும் கிடைக்கப் பட்ட மொத்த வருடவாரி வருமானம் என்ன ?

(ஈ) மேற்படி பண்ணை சாகுபடி ஆரம்பித்த பிறகு நாளதுவரையில் பசலிவாரியாக ஒவ்வொரு தேவஸ்தானத்திலும் கிடைக்கப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு ?

(உ) மேற்படி கிராமங்களில் கூட்டுறவு விவசாயப் பண்ணை ஆரம்பிக்க அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சி என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) to (*e*) A statement [a] is placed on the table of the House.

---

[a] Printed as Appendix VIII on pages 1138–1139 infra.